# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு.ப. ராஜ்குமார் , MA., LLB., Phd.,**
**மாண்புமிகு மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**பெறுநர்**

மரியாதைக்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து துறைத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக
வளர்ச்சி, சட்டம், நீதி மன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்,
(தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி)

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோயம்புத்தூர், மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, கவுண்டம்பாளையம்,
கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதிகள்)

**ந.க.எண் : 1219/2015 / எம்சி. 8 நாள் : 06.03.2015**

**அய்யா /அம்மா,**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - 2015-16ம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை சமர்ப்பித்தல் - மாமன்ற சிறப்புக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் 2015-16ம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை தாக்கல் செய்யும் **மாமன்ற சிறப்புக் கூட்டம் 12.03.2015 வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு** மாண்புமிகு மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) ப. ராஜ்குமார்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**/ உண்மை நகல் /**

**மாமன்ற செயலாளர்**

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சிறப்புக் கூட்டம் - மார்ச் 2015

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | 1 |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** | |
| 1 | பொது கணக்குப் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – வருவாய் மற்றும் மூலதனநிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதி – 2014–2015–ம் ஆண்டு திருத்திய திட்ட மதிப்பீடு மற்றும் 2015–2016–ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்ட நிதிக்கான வரவு செலவு அறிக்கை – அனுமதி வேண்டுதல் – தொடர்பாக. | 2 |

**நன்றியுரை**

**அ)** **திருக்குறள்**

ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி .

(477)

விளக்கம்

தம்முடைய வரவு, செல்வ நிலைகளையும், பெறுபவர் தகுதியையும், நேரிய வரைமுறைகளையும் அறிந்து, வகுத்து, அளந்து வழங்குவதே பொருட்களைப் போற்றிப் பாதுகாத்து, ஈகையைத் தொடரும் வழி.

**திருவள்ளுவர்.**

---

ஆ) **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**பொருள் எண் 1**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – வருவாய் மற்றும் மூலதனநிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதி – 2014–2015–ம் ஆண்டு திருத்திய திட்ட மதிப்பீடு மற்றும் 2015–2016–ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்ட நிதிக்கான வரவு செலவு அறிக்கை – அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதிகளின் 2014–2015–ம் ஆண்டு திருத்திய திட்ட மதிப்பீட்டிற்கும், 2015–2016–ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்கும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்திற்கான வரவு செலவு அறிக்கைக்கும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்.176 நாள்.23.02.2015–ன் மூலம் ஒப்புதல் அளித்துள்ளது.

எனவே 2014–2015–ம் ஆண்டிற்கான திருத்திய திட்ட மதிப்பீட்டிற்கும், 2015–2016–ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்கும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்திற்கான வரவு செலவு அறிக்கைக்கும் மாமன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம். ந.க. எண். 9325 / 2014 / பி–1

---

**(ஒப்பம்) ப. ராஜ்குமார்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**